ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

यदाहुर्ब्रह्मैके पुरुषमितरे कर्मच परेऽ
परे बुद्धं चान्ये शिवमपि च धातारमपरे ।
तथा शक्तिं केचित् गणपतिमुतार्कंच सुधियो
मतीनां वै भेदात्त्वमसि तदशेषं मम मतिः ॥ महिम्ने ।

ஹே ஈச! உம்மைச் சிலர் சுத்த பிர்மஸ்வரூபமாகக் கருதுகின்றார்கள். மற்றும் சிலர் புருஷன் என்று சொல்கிறார்கள். வேறு சிலர் கர்மாவென்று கூறுகின்றார்கள். சிலபேர்கள் புத்தர் என்று மொழிகின்றார்கள். பின்னும் சிலர் சிவன் என்று செப்புகின்றார்கள். சதுர்முக பிர்மாவென்று சிலர் அழைக்கிறார்கள். சக்தி என்று ஒரு சார்பார் அபிப்பிராயப் படுகின்றார். கணபதி என்று சிலரும், சூர்யன் என்று சில வித்வான்களும், அவரவர்களுடைய புத்தியின் பேதத்தை அனுஸரித்துப் பலவாறாய்க் கூறுகின்றார்கள். இங்கு நிரூபிக்கப்பட்ட சகல வஸ்து ஸ்வரூபமாயும் நீர் விளங்குகிறீர் என்று என் அபிப்பிராயம் என்று ஒரு வித்வான் அறிவிக்கிறார்.

இங்கு விவரிக்கப்பட்ட நாமாக்களையோ, இதற்குப் புறம்பான வேறு பெயர்களையோ அவரவர்களுக்கிஷ்டமான பெயரை பகவானுக்குக் கற்பித்துத் தங்களால் கற்பிக்கப்பட்ட பெயருடைய பகவான்தான், மற்றவர்களால் ஆராதிக்கப்படும் தெய்வங்களைக் காட்டிலும் உயர்ந்தவர் என்று வீணில் கலகங்களைச் சிலர் விர்த்திசெய்து தேவதா நிந்தையால் ஏற்படும் அதிகமான பாபத்திற்கும் உள்ளாகிறார்கள். இவ்விதம் சொல்வது தவறு.

यो यो यां यां तनुंभक्तः श्रद्धयार्चितुमिच्छति ।

எந்தெந்த மாதிரிப் பெயரையிட்டு யார் யார் எவ்விதம் ஆராதித்தாலும், அவரவர்களுக்கும் இஷ்டத்தை நான் அளிக்கத் தயாராயிருக்கிறேன் என்று ஸ்ரீபகவான் வெளியிட்டிருப்பதால், பேத புத்தியைக்கொண்டு ஈசுவர நிந்தைசெய்யாமல், ஸர்வாத்ம ஸ்வரூபமாய் பகவானை உபாஸிக்கவேண்டுமென்று அறிவிக்கப்படுகின்றது.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

குரோதன-ஸூ ஐப்பசி-மீ ௧௩௨

யுக்திவாதம்.

(௫௭௩-ம் பக்கத்தொடர்ச்சி.)

சுருதிகளின் அபிப்பிராயத்திற்குச் சற்றும் மாறாமல் மஹரிஷிகளால் கூறப்பட்ட ஸ்மிருதி புராணங்களிலும் வித்தியாஸமாயிருக்குமோவென்று சங்கிப்பதற்குமிடமில்லை. அவர்கள் மிகவும் அரிதான தமது தபோக்கினியால் காமம், குரோதம் முதலான சத்துருக்களை தகித்தவர்கள். தமது உள்ளங்கையிலுள்ள நெல்லிக்கனியைப்போல் பிரத்தியக்ஷமாய் முக்காலங்களிலுமுள்ள சகல விஷயங்களையும் நன்கறியக்கூடியவர்கள். அவர்களால் அறியப்படாத விஷயம் ஒன்றுமேயில்லை. இவர்கள் பகவானுக்கு அடுத்தபடியில் தங்களையும் போற்றும்படியான மகிமை பெற்று விளங்குகிறார்கள்.

ज्ञानमयदृष्टिपातप्रमुषितकालाध्वविप्रकर्षेषु ।
विषयेषु नैष्ठिकानां सर्वपथीना मतिः क्रमते ॥

விசேஷ தபோமகிமை பெற்ற மகரிஷிகள் ஞானஸ்வரூபமாய் விளங்கும் தம்முடைய திருஷ்டி பாதங்களால், அதாவது தமது ஞானசக்ஷுஸினால், எவைகளை அறியவிரும்புகின்றார்களோ அந்தந்த வஸ்துக்களை மறைக்கும் காலம், மார்க்கம், தேசம் முதலானவைகளை வெகுதூரத்தில் விலக்கிவிடுகிறார்கள். எந்தவிடத்திலிருந்தாலும் எந்த ஸமயத்தில் எந்தவஸ்துவை அவர்கள் அறியவேண்டுமென்று கருதுகிறார்களோ அந்த வஸ்துவானது அவர்களுக்குப் பிரத்தியக்ஷமாய் விளங்கும். அம்மகான்களுடைய புத்திக்கு விஷயமாகாத வஸ்து மூவுலகிலுமில்லை என்று ஓர் அறிஞர் செப்புகின்றார்.

மேலும், அவர்கள் யுக்திவாதிகளைப்போல் காமக்குரோதத்தையோ, ஒருவரிடம் தமக்கிருக்கும் அபிமானத்தையோ முன்னிட்டு ஒருவிஷயத்தை மாறுதலாக ஒருகாலும் சொல்லமாட்டார்கள். உலகநன்மையின் பொருட்டு அவதரித்த கருணாமூர்த்திகளாகையால் அற்பமேனும் தோஷமில்லாமல் சகல தர்மதத்வங்களையும் போதிக்கும் சக்திவாய்ந்த மகான்களன்றோ மகரிஷிகள். இவ்வித புத்திசக்திகளைப் பெற்றுப் பிறருடைய ஸ்துதியையோ, அல்லது நிந்தையையோ ஒன்றையும் எதிர்பாராமல் லோகக்ஷேமம் ஒன்றையே பெரிதாய் நினைத்துப் பக்ஷபாதமின்றித் தர்ம முறைகளை வெளியிடவந்தபோதிலும், சிலர் "தர்ம சாஸ்திரங்களில் ரிஷிகள் தங்களுடைய சொந்த அபிப்பிராயங்களைக்கொண்டு பக்ஷபாதமாய்த் தோன்றியபடி பலவாறாய் வெளியிட்டிருக்கிறார்கள்" என்று கருதுவார்களே என்று சங்கைகொண்ட மனு தமது ஸ்மிருதியில் ஸ்பஷ்டமாய்,

श्रुतिं पश्यन्ति मुनयः स्मरन्ति च तथा स्मृतिम् ।

"ஸ்மிருதி கர்த்தாக்கள் சுருதிகளின் கருத்தை நன்கறிந்து தாம் அறிந்தபடியே அற்பமேனும் சேர்க்காமலும், விலக்காமலும் தர்மங்களை ஸ்மிருதிகளில் வெளியிட்டிருக்கிறார்கள்" என்று நிரூபித்திருக்கிறார். இவவிதம் சுருதியின் அர்த்தத்தையே சகலரும் சுலபமாயறியும்பொருட்டு எளிய வசனங்களால் ஸ்மிருதி என்கிற பெயருடன் வெளியிட்டிருப்பதால் அவைகளால் போதிக்கப்படும் விஷயங்களில் வித்தியாஸமாயிருக்குமோவென்று சந்தேகிக்கக்கூட இடமில்லை. ஆகையால், யுக்திவாதத்தில் எந்தெந்த தோஷங்கள் ஸம்பவிக்குமென்று நிரூபித்தோமோ, அந்த தோஷங்களில் ஒன்றுகூடப் பிரமாணவாதத்திற்கு ஏற்பட நியாயமில்லை என்று நிச்சயமாய்த் தெரிகிறது. இதனால் தோஷத்தோடுகூடிய யுக்திவாதத்திற்கும் யாதொரு தோஷமுமில்லாமல் விளங்கும் பிரமாணவாதத்திற்கும் விரோதம் நேருங்கால் பிரமாணவாதமே சிறந்ததென்றும் அதைக்கொண்டே விஷயங்களைத் தீர்மானம் செய்யவேண்டுமென்றும் யுக்திவாதத்தை அந்தவிடத்தில் கவனிக்கக்கூடாதென்றும் ஏற்பட்டது. இவ்விதமிருக்க தற்காலத்தில் சிலர்

आत्मनः प्रतिभा त्वासीदागमाच्च बलीयसी ॥

தங்களுடைய புத்தியே வேதத்தைக்காட்டிலும் சிறந்ததென்றும் அதற்குத் தோன்றுகிறபடியே காரியங்களை நடத்தவேண்டுமென்றும் கருதி சாஸ்திரவிரோதமான பலகார்யங்களைத்தாங்களுமனுஷ்டித்துப் பிறரையும் அனுஷ்டிக்கும்படி செய்து வீணில் பாபத்திற்குள்ளாகிறார்கள். அந்தோ! ஸர்வேசுவரரான பகவானை இவர்களுக்கு நல்லபுத்தியைக் கொடுக்கும்படி பிரார்த்திக்கின்றோம்.

சுபம்.

ஆர்யதர்மம் உப பத்திராதிபர்.

தீபாவளிப் பண்டிகை.

தீபாவளிப் பண்டிகையைப்பற்றி நம் ஆர்யதர்ம பத்திரிகையில் முன் வருடத்திய 43-வது ஸஞ்சிகையில் சில தகவல் அறிவித்திருந்தது நம் ஆரியகுலோத்தமர்களது ஞாபகத்திலிருக்கக்கூடும். ஆயினும் தற்காலம் வெளியிடவேண்டியது முன் விஷயத்தைக் காட்டிலும் வேறாய் இருப்பதுபற்றி மீண்டும் அதிலிறங்கலானேன். அதாவது — தீபாவளி யென்பது இன்னதென்றும் அதை அனுஷ்டிப்பதன் காரணம் இன்னதென்றும் அதன் காலம் இவ்வருடத்தில் புரட்டாசி மாதமல்ல. ஐப்பசி மாதத்தில்தான் செய்யவேண்டுமென்றும் தகுந்த சாஸ்திரப்பிரமாண ஆதாரங்களுடன் இவ்வருடப் பத்திரிகை 33-வது ஸஞ்சிகையில் வரையப்பட்டிருப்பதை அவ்வாரமே பார்க்க நேராமற்போன துர்ப்பாக்கியத்தை இப்போதுதான் என் மித்திரரொருவர் முகமாய் அறிந்து அதனை தரிசித்து அம்மகாபாதகத்தை நிவர்த்தித்துக்கொள்ளலாமென்றிறங்க ஆரம்பித்தேன். இதற்கிணங்கவே இதைத் தூண்டுவதுபோலும் தீபாவளிப்பண்டிகை ஒன்றா? இரண்டா? என்று பலவாறு சுதேசமித்திரன் 2—10—25-வது பத்திரிகையிலும் அடுத்த பத்திரிகையிலும் பார்க்க நேர்ந்தது மிகவும் தூண்டுகோலாயிற்று. இனி இதன் விஷயத்தில் என் சிற்றறிவுக்கெட்டியதை வெளியிடுகின்றேன். இம்மாதிரியே பண்டிதோத்தமர்கள் யாவ

ரும் அநேக அரிய விஷயங்களை ஆசங்கித்து ஆராய்ச்சி செய்ய நமது ஆர்யதர்ம பத்திரிகையே புஷ்பக விமானம்போல் இடம் கொடுத்தருள நம்முலகில் பண்டிதர்களின் ஆதரவைத்தேடுகிறது. ஆகவே நம் சாஸ்திரவிஷயங்களின் சர்ச்சைகளை இப்பத்திரிகையி லேயே விசாரிப்பது கௌரவம்தரும். மற்றப் பத்திரிகை இம் மாதிரி மதவிஷயமல்லாது வேறு விஷயத்திற்கே ஏராளமாய் இடம் தருவதாய் உலகமறிந்திருக்க அப்பத்திரிகையின் தெரு வில் நின்றுகொண்டு இவ்விஷயத்திற்கு யாரும் பதில்கூறத் தயா ராயில்லையா? பண்டிதர்களில்லையா? ஆசார்யர்களில்லையா? என்று கோவென்று கூவுவது நம் ஆர்யதர்மாக்களுக்கழகல்லவென்று கூறி இனி பிரகிர்தத்திலிறங்குவாம்.

33வது சஞ்சிகையில் காட்டுமன்னர்கோயில் வி. உமாமகேச் வர சாஸ்திரி என்பவர் பல தர்மசாஸ்திர வசனப் பிரமாணங்களு டன் இவ்வருடம் தீபாவளி புரட்டாசிமீ 30வயில் செய்யக்கூடா தென்றும், ஐப்பிசிமீ 29உதான் செய்யவேண்டுமென்றும் விளக் கியிருக்கிறார். இதற்கு அனுகுணமாகவே சுதேசமித்திரனில் 2–10–25லும், 3–10–25லும் முறையே திருவாவடுதுறை ஆதீனம் சோதிட வித்வான், ஸ்ரீமான் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையும், ஸ்ரீமான், எஸ். குருகுஹதாஸப் பிள்ளையும் எழுதியிருக்கின்றனர். இவ்விதம் எழுதுகிறவர்கள் மேற்கோள்களைக் காட்டியிருப்பது டன் புரட்டாசி மாதத்தில் செய்தால் அநேக கெடுதல்களுண்டா மெனவும் காட்டியுள்ளார். இவ்வனைத்தையும் நானும் ஏற்கிறேன். ஆயினும், இங்கு ஸம்ஸ்கிருத தர்மசாஸ்திரங்களைப் பார்த்தால் எங்கும் ஆசுவயுக் என்று மாதத்திற்குப் பெயர் போடப்பட்டிருக் கிறது. ஆச்வயுக் என்றால் ஐப்பிசி என்றுதான் தமிழிற் கூறமுடியு மென்கின்றனர்; அதுவும் அநேகமாய் சரி. ஆகவே இவ்வருஷம் புரட்டாசியில் அனுஷ்டிப்பது சரியல்ல என்கின்றனர். இவ்விஷ யத்தில் மட்டிலும் என்மனம் சற்று இவர்களைவிட்டு விலகுகிறது. அதைமட்டிலும் இங்கு தெரிவிக்கிறேன்.

உமாமகேச்வரசாஸ்திரிகள் தனது ஆதாரவசனங்களைப் பலப் படுத்துவதற்காக ஆச்வயுஜ சப்தத்திற்கு **नक्षत्रेण युक्तः कालः** என்ற வியாகரண ஸூத்திரத்தின்படி அர்த்தத்தை ஸாதிக்கின்றனர்

இந்த அர்த்தம் சரிதான். ஆயினும் அவர்கள் சொல்கிறபடி நாம் அங்கீகரிக்கமுடியவில்லை. ஏனெனில் சாஸ்திரிகளவர்கள் சொல்கிறபடிதானென்ருல் ஆசுவயுஜமாதமோ அல்லது மற்ற மாதங்களோ அந்தந்த மாதத்திற்குறிய நக்ஷத்திரம் பர்வகாலமான பௌர்ணமியில் கூடின பிறகுதான் அந்தந்த மாதத்தின் வியவகாரம் ஏற்படவேண்டும். அங்கிருந்துதான் தேதியும் சாந்திரமானுனுஷ்டானம் செய்கிறவர்கள் கொள்ளவேண்டும். சாந்திரமானுனுஷ்டானம் செய்கின்ற ஆந்திரர் கர்ணுடர் முதலியவர்கள் பிதிர்கன்மங்களை அதன் பிறகுதான் அனுஷ்டிக்கவேண்டும். அவ்விதமோ இதுவரை அனுஷ்டானத்தைக் கண்டிலம். அமாவாஸை கழிந்ததும் வளரும் சந்திரனின் முதற்பிறையைக் கணக்கிட்டு திதி முதலியவை பிரவர்த்திக்கின்றன. ஆகவே, ஆச்வினமாதம் ஐப்பசிமீ 15உமுதல்தான் லக்ஷணத்துடன் கூடியிருக்கிறதென்ருல் அவ்வளவு பொருத்தமாகுமாவென்றும் ஐப்பசிமீ 15உக்கு முன்னுல் அவலக்ஷணம்தானுவென்றும் சந்தேகம் கொள்கிறது. தவிரவும், சைத்ரம் வைசாகம் முதலிய 12 மாதங்களுக்கும் சித்திரை விசாகம் முதலிய நக்ஷத்திரங்கள் அம்மாதப் பௌர்ணமியில் கூடுவதென்றுதான் ஒப்புக்கொள்கிருேம். அப்படிப் பௌர்ணமியில் அவசியம் கூடித்தான் ஆகுமென்பதுமில்லை. அவ்விதமாகாதென்பதை வைத்துத்தான் சிராவணமாதத்தில் உபாகன்மவை விதித்தவிடத்தில்,

श्रावणयोगस्तु भवतु वा मावा तस्यां पूर्णिमायां कार्यम् ।

சிரவண நக்ஷத்திரம் அந்தப் பௌர்ணிமையிற் கூடினுலும் சரி, இல்லாவிட்டாலும் சரி. பௌர்ணிமையிலேயே செய்யவேண்டுமென்றபடி அந்தந்த நக்ஷத்திரம் பௌர்ணிமையில் கூடுகிறதென்கிற நியமமில்லையென்பது நிச்சயம். ஆகவே மாதம் லக்ஷணத்தோடு கூடுகிறதென்பது சரியாகப் புலப்படவில்லை. இதனுல் என் அற்பபுத்திக்கெட்டியது இது **आश्वयुक्कृष्णचतुर्दश्याम्** என்றதனுல் ஆசுவயுஜமாதமென்று எந்த தினங்கள் வழங்கப்பெறுமோ அவைகளுள்வரும் கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசியில்தான் தீபாவளி செய்யத்தக்கது என்பதே. ஆனுல்,

उषेऽभ्यङ्गं तुलास्नानं कृत्तिकादीपमेव च ।
धनुर्मासि हरेःपूजा शिवरात्रिव्रतं तथा ।
सौरमानेन कर्तव्यं चान्द्रमाने न कारयेत् ॥

என்று சாஸ்திரிகளவர்கள் தீபாவளி துலாஸ்நானம் கார்த்திகை தீபம் தனுர்மாத பூஜை சிவராத்திரி இவைகளை ஸௌரமானப் பிரகாரம் செய்யவேண்டும். சாந்திரமானத்தால் செய்யத்தக்க தல்லவென்று தர்மசாஸ்திர ஸங்கிரகவசனம் கூறுகின்றனதே என்றுல் இதற்கு தேவாலய பூஜாவிஷயத்தில் வினியோகமிருக்கலாம். ஏனெனில் இது விஷயமான வாக்கியங்கள் ஆசுவயுஜ கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசியைமட்டிலும் வற்புறுத்துகின்றனவேயொழிய வேறொன்றையும் விசேஷமாய்க் குறிப்பிடவில்லை. இனி,

स्वातिस्थिते रवाविन्दुर्यदि स्वातिगतो भवेत् ।

என்று சுவாதி நக்ஷத்திரத்தில் சந்திரசூர்யர்கள் இருக்கும்போது தீபாவளி நடத்தவேண்டுமென்று சொல்வதும் அவ்விதம் கூடியிருந்தால் பலன் விசேஷமென்பதைக் காட்டுமே தவிர அவ்விதம் கூடும் தினம்தான் தீபாவளி தினமென்று அர்த்தம் கொள்வதும் உசிதமல்லவென்று தோன்றுகிறது.

मन्दवारे प्रदोषोऽयं दुर्लभः सर्वदेहिनाम् ।
तत्रापि दुर्लभस्तस्मिन् कृष्णपक्षे समागमः ॥

என்று பிரதோஷவிரதம் விஷயத்திற்போலெனக் கொள்ளலாம். மற்றும்,

मासानां मार्गशीर्षोहमृतूनां कुसुमाकरः ।

என்ற கீதாவசனப்படி கிருஷ்ணஸ்வரூபமான மார்க்கசீர்ஷமாஸமான கார்த்திகைமீ அமாவாஸையைக் கழித்த மறுதினமுதல் செய்யவல்லவோ வேண்டும் என்று சாஸ்திரிகள் கூறுகின்றனர். இது அவ்வளவு ஒத்ததாய் இல்லை. மாதங்களுக்குள் மார்க்சீர்ஷம் நான் என்று பகவான் சொன்ன கருத்து வேறு. அது மிக உத்தமமென்று அபிப்பிராயமிருப்பின் கிருஷ்ணரூபமான மார்க்கசீர்ஷ மாதத்திலேயே விவாகாதி சுபமுகூர்த்தங்களை நடத்தக்

கூடாதாவென்றுகூட சாஸ்திரிகளவர்கள் கூறலாம். தனுர்மாஸ பூஜையைக் கேட்பதற்கே நியாயமில்லை. ஏனெனில் தனுர்மாஸ பூஜை என்று பெயரேயொழிய மார்க்கசிர்ஷமாஸ பூஜை என்று பெயரில்லையென்பது சாஸ்திரிகளவர்கட்கே தெரியும். ஆகவே ஆசுவயுஜ கிருஷ்ணசதுர்த்தசியென்ற முக்கிய காலத்தைமீறி ஏதோ நக்ஷத்திரயோகம் இருக்கிற கௌணத்தை முன்னிட்டு கார்த்திக கிருஷ்ணசதுர்தசியில் தீபாவளிசெய்வது சாஸ்திரஸம்மதமில்லை. யென்றுதான் தோன்றுகிறது.

मुख्यकालं समाश्रित्य गौणमप्यस्तु साधनम् ।
न मुख्यद्रव्यलोभेन गौणकालप्रतीक्षणम् ॥

முக்கியமான காலத்தை முன்னிட்டு கௌணமும் ஸாதாரணமாய் இருக்கட்டும். முக்கியமான திரவியத்தில் ஆசையால் கௌண காலத்தை எதிர்பார்ப்பது அழகல்ல அதாவது சிராத்தத்திற்கு இஞ்சியும் பலாக்காயும் முக்கிய திரவியமென்றும் அதில்லாவிடில் சிராத்தமே பூரணமாகாதென்றும் சொன்னால் பலாக்காயும் இஞ்சியும் கிடையாததால் சிராத்தத்தை விட்டுவிட்டு அத்திரவியங்கள் கிடைத்தவுடன் சாஸ்திரப்படி சிராத்தம் செய்வதுண்டா? அது போல் அசுவயுஜமென்ற முக்கியமாதத்தை விட்டுவிட்டு கார்த்திக மாதத்தில் நக்ஷத்திரயோகத்திற்காக அதை நாடுவது அழகாகுமோவென்று என்மனம் யோசிக்கிறது. இவ்விதம் பல வருடங்கள் நாமறிய நேர்ந்திருக்கின்றனவென்பதைப் பழைய பஞ்சாங்கங்கள் கட்டிவிருந்தால் தேடிப்பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். அக்காலங்களில் இவ்விதம் விவாதம் நேர்ந்ததாய் என் அனுபவத்தில் ஞாபகமில்லையென்பதும் எனக்குப் பிரமாண கோடியிலேறுகிறது. ஆகவே ஆவணி அவிட்டம் என்று உபாகர்மாவுக்குத் தமிழில்பெயர் ஏற்பட்டதில் அநேகமாய் ஆவணிமாதம் அவிட்ட நக்ஷத்திரத்தில் நேருமென்று அர்த்தம் கொள்கிறோமே தவிர ஆவணிமாதத்தில் அவிட்டம் சேர்ந்தால்தான் செய்வோமென்று சொல்லும் வழக்கம் இல்லையென்பதுபோல் ஆசுவயுஜம் என்றால் அநேகமாய் ஐப்பசிமாதம் என்றுதான் கொள்வது அழகு என்று தோன்றுவதால் இவ்வருடம் தீபாவளியை சென்ற புரட்டாசி மாதத்திலேயே அனுஷ்டித்ததுதான் சாஸ்திர சம்மதம் என்று

நினைக்கிறேன். இதற்குமேல் ஐப்பசிமாதத்தில்தான் செய்யவேண்டும் என்று மீண்டும் பண்டிதோத்தமர்கள் எழுதுவார்களானால் சந்தோஷமாயும் ஏற்றுக்கொள்வேன்.

चतुर्दशीयाश्वयुजस्य कृष्णा स्वात्यर्कयुक्ता च भवेत्प्रभाते ।
स्नानं समभ्यर्च्य नरैस्तु कार्यं सुगन्धतैलेन विभूतिकामैः ॥

ஆசுவயுஜத்தின் கிருஷ்ணசதுர்தசி ஸ்வாதியில் சூரியனோடு காலையிற் கூடியிருந்தால் ஐசுவரியத்தை விரும்பும் மானிடர்கள் (லக்ஷ்மியை) பூஜித்து ஸ்னானம் செய்யவேண்டும் என்பதாதி பல ஸ்மிருதி வசனங்களை ஊன்றி ஆலோசித்தால் ஆசுவயுஜகிருஷ்ணசதுர்தசிதிதிப் பிரதானமென்பதும் மற்றயோகங்கள் விசேஷத்தைக் காட்டுகின்றவென்பதே விளங்குமென்று இதனுடன் நிறுத்திக் கொள்கிறேன். சுபம்.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

ஸ்ரீ மத்வாசார்ய பாஷ்ய ஸித்தாந்தம்.

1 பிரஹ்மம் என்பது எது?

விஷ்ணுவே. இவரைத் தவிர வேறு பிரஹ்மம் என்ற வஸ்து இல்லை. இவர்தாம் எல்லா உலகங்களுக்கும்.

उत्पत्तिस्थितिसंहारानियतिज्ञानमावृतिः ।
बन्धमोक्षौ च पुरुषाद्यस्मात्स हरिरेकराट् ॥ इति स्कान्दे ॥

(ஆக்கல், காத்தல், அழித்தல், நியமனம், ஞானம், அக்ஞானம், பந்தம், மோக்ஷம் ஆகிய எட்டுக்கும்) கர்த்தாவாயிருக்கிறார். (1—1—2)

2 விஷ்ணுதான் ஜகத்காரணர், என்பதை எப்படி அறியலாம்?

சாஸ்திரங்களின் வாயிலாக அறியலாம். (1—1—3)

3 சாஸ்திரங்கள் எவை?

ऋग्यजुः सामाथर्वाश्च भारतं पञ्चरात्रकम् ।
मूलरामायणं चैव शास्त्रमित्यभिधीयते ॥
यच्चानुकूलमेतस्य तच्च शास्त्रं प्रकीर्तितम् ।
अतोन्यो ग्रन्थविस्तारो नैव शास्त्रं कुवर्त्म तत् ॥ स्कान्दे ॥

ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வம் ஆகிய நான்கு வேதங்கள், மஹாபாரதம், மூலராமாயணம் (வால்மீகி ராமாயணமன்று) இவைகள் சாஸ்திரங்கள் எனக் கூறப்படுகின்றன. இவைகளுக்கு அனுகூலமான பாகவதம் முதலிய புராணங்களும், ஏனைய நூல்களும் சாஸ்திரங்களேயாகும்.

4 மற்ற நூல்கள் யாரால் இயற்றப்பட்டன?

அஜ்ஞர்களான ஜீவர்களை மோஹிக்கச் செய்வதற்கு விஷ்ணுவின் கட்டளைப்படி பரமசிவனால் இயற்றப்பட்டன. அவரால் மற்றவர்களைக்கொண்டு இயற்றப்பட்டவையுமுண்டு. மோஹனார்த்தம் செய்யப்பட்டவையாதலால் நம்பத்தகாதவைகள். (1-1-1)

एषमोऽहं सृजाम्याशु योजनान्मोहयिष्यति ।
त्वं च रुद्र महाबाहो मोहशास्त्राणि कारय ॥

விஷ்ணு கூறுகிறார். "ஏ பரமசிவனே! நான் ஒரு மோஹத்தைச் சிருஷ்டிக்கிறேன். அது அயோக்யர்களை மோஹிக்கச் செய்யும். நீயும் மோஹசாஸ்திரங்களை இயற்றுவாயாக."

5 வேதங்களிலேயே ஓர் பாகத்தில் "ஆகாசமே ஜகத்காரணம்" என்றும், மற்றோர் பாகத்தில் "பரமசிவனே ஜகத்காரணர்" என்றும், மற்றுமோர் பாகத்தில் "விஷ்ணுதான் ஜகத்காரணர்" என்றும் கூறப்பட்டிருக்க, விஷ்ணுவே எல்லாவற்றிற்கும் கர்த்தா என்பது முரணுவதன்று?

மேல்நோக்காகப் பார்ப்பின் ஒன்றுக்கொன்று முரணுவதாகத் தோன்றும். ஆனால்,

उपक्रमोपसंहारावभ्यासोऽपूर्वता फलम् ।
अर्थवादोपपत्ती च लिंगं तात्पर्यनिर्णये ॥

பிருஹத்ஸம்ஹிதை.

உபக்ரமம் (ஆரம்பம்) உபஸம்ஹாரம் (முடிவு) அப்யாஸம் (ஒன்றையே அடிக்கடி மொழிதல்) அபூர்வதை (வேறு பிரமாணத்தால் ஸித்திக்காமலிருத்தல்) பலன், அர்த்தவாதம் (சிலாகித்தல்) உபபத்தி (யுக்தி) ஆகிய ஏழு தாத்பர்ய லிங்கங்களையுங்கொண்டு ஆராய்ந்துபார்ப்பின் விஷ்ணுவே ஜகத்காரணர் என்றேற்படும். மேலும் ஆகாசம் आ—समन्तात् काशते—प्रकाशते என்றபடியும்,

शिवः सुखात्मकत्वेन शर्वः शंरोधनाद्धरिः ।

என்ற பிரஹ்மாண்டபுராண வசனத்தின்படியும் நானாவித சப்தங்களினால் முக்கிய விருத்தியால் விஷ்ணு ஒருவரே கூறப்படுகிறார். ஆகையால் எங்கு மற்றவர்கள் ஜகத்காரணரென்று கூறப்பட்டுளதோ அங்கும் விஷ்ணுதான் என்றே ஸித்தாந்தம். ஆனால் எங்கு முக்யார்த்தத்திற்கு விரோதம்ஏற்படுகிறதோ, அங்கு அமுக்யார்த்தத்தைக்கொள்ளவேண்டும். (1-1-4,6,10; 1-3-3;1-4-2; 2-1-13)

6 ஜீவர்கள் சிருஷ்டிக்குமுன் இருப்பவரா, இல்லையா? முதற் பக்ஷத்தில் சிருஷ்டியே அவசியமில்லை. இரண்டாவது பக்ஷத்தில் "ஜீவன் அநாதி" என்ற சுருதி விரோதம் ஏற்படும்.

ஜீவர்கள் எப்போதும் இருப்பவர்களே. அவர்களுக்கு விஷ்ணுவால் ஏற்படும் பாஹ்ய தேகஸம்பந்தமே சிருஷ்டி எனப்படும். (2—3—18, 19, 30)

7 சிருஷ்டியினால் பரமாத்மாவுக்கு யாது பிரயோஜனம்?

ஒருவிதப் பிரயோஜனமுமில்லை. ஆயினும் சந்தோஷத்தினால் உன்மத்தனாயிருப்பவனின் கானம் முதலியன போன்றது. (2—1—33,34.)

8 ஜீவனும் பரமாத்மாவும் ஒன்றா?

இல்லை. இருவருக்கும் அத்யந்த பேதமுண்டு. இந்தப்பேதம் வியவஹாரதசையிலும், பாரமார்த்திக தசையிலும், முக்தியிலும் உண்டு. பேதம் ஐந்து வகையாகும்.

जीवेश्वरभिदाचैव जडेश्वरभिदा तथा ।
जीवभेदोमिथश्चैव जडजीवभिदा तथा ।
मिथश्च जडभेदोयं प्रपञ्चो भेदपञ्चकः ॥

1. ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் பேதம் 2. ஜடத்துக்கும் ஈசுவரனுக்கும் பேதம். 3. ஜீவர்களில் ஒருவர்க்கொருவர் பேதம். 4. ஜடத்திற்கும் ஜீவனுக்கும் பேதம். 5. ஜடத்திற்குள் பரஸ்பரம் பேதம்.

9 ஜீவன் அணுவா? வியாப்தனா? எங்கு வசிக்கிறான்?

ஜீவன் அணுத்தான். ஹிருதயத்தில் வசிக்கிறான். அப்படியிருந்தும் நறுமணம் வாய்ந்த சந்தனம் போன்றும், விளக்கைப் போன்றும் தேகமெங்கும் பரவியிருந்து ஆங்காங்கு உண்டாகும் சுகதுக்காதிகளை உணர்கிறான். (2—3—20, 24, 25, 26.)

10 ஜீவர்களின் ஸ்வரூபம் எத்தன்மையானது?

மூன்றுவிதமானது. முக்தி யோக்யர்களின் ஸ்வரூபம் ஞானானந்தமயமானது. (ஸச்சிதாநந்தரூபமானது) தமோ யோக்யர்களின் ஸ்வரூபம் அக்ஞானதுக்கமயமானது. நித்ய ஸம்ஸாரிகளின் ஸ்வரூபம் இரண்டினாலும் கலப்புள்ளது. (2—3—32)

11 அப்படியாயின் முக்தி யோக்யஜீவனுக்கு அன்யதாநுபவம் எப்படி நேரிடுகிறது?

அவர்களின் நிஜஸ்வரூபம் அவித்யையால் மூடப்பட்டிருப்பதால் விபரீதானுபவம் ஏற்படுகிறது. (2—3—32)

12 ஜீவர்கள் ஸ்வதந்திரர்களா?

இல்லை. பகவானுடைய தாஸர்கள். ஆயினும் பரமாத்மா அவர்களுக்குச் சிறிது ஸ்வாதந்திர்யத்தைக் கொடுத்திருக்கிறார். **दत्तस्वातन्त्र्यम्** அதுவுமில்லையேல், தம் சொந்த அறிவை உபயோகிக்க அவகாசமேற்படாதாகையால் ஜீவர்களுக்காக ஏற்பட்ட விதிநிஷேதரூபமான சாஸ்திரம் நிஷ்பிரயோஜனமாகிவிடுமல்லவா? (2-3-33,41,42)

13 மோக்ஷம் என்றால் என்ன? அதை எப்படி ஜீவன் பெறுவது?

கிருமி, கீடம் முதலிய பலவிதமான நீசஜன்மங்களிற்பிறந்து அனேகவித துக்கங்களை யனுபவிக்க முக்ய காரணமான இந்த ஜனனமரணரூபமான ஸம்ஸாரத்தினின்று விடுபட்டு, பஞ்சபூதங்களாலாகிய இந்த ஸ்தூலதேகத்தையும் இதற்கு ஆதாரமான லிங்கதேகத்தையும் விலக்கி, ஸச்சிதாநந்தமயமான ஸ்வரூபதேக

த்தால், ஸ்ரீமந் நாராயணமூர்த்தியின், சுவேதத்வீபம், அநந்தாஸனம், வைகுண்டம் என்ற திவ்ய நகரங்களில் வாஸம்செய்து, அவைகளுக்கு எல்லைகளாயமைந்துள்ள அர, ணிய, என்ற அமிருத ஸமுத்திரங்களின் கரைகளிலுள்ள உத்யான வனங்களில் உலாவி, இனிமையான வாஸனை பொருந்திய புஷ்பங்களின்மேல் வீசும் மந்த மாருதத்தினிடையே ஸஞ்சரித்து, யதேச்சையாக தனக்குத் தோன்றும் ரதகஜதுரகம் முதலிய வாஹனாதிகளையோ, வீணா வேணு மிருதங்கம் முதலிய கான ஸாதனங்களையோ நிர்மாணம் செய்துகொண்டு விஹாரம் செய்து, அபராஜிதம் எனும் ரத்ன மண்டபத்தில் விளங்காநிற்கும் லோகமாதாவான ஸ்ரீ லக்ஷ்மிதேவியால் ஸேவிக்கப்பட்டவனும் முக்த ப்ராஹ்மாதிகளால் துதி செய்யப்பட்டவனும், அநந்த அநவத்யகல்யாண குணங்களினால் ஸமுத்திரம்போல் பூர்ணனுமிருக்கிற ஸ்ரீமந்நாராயணமூர்த்தியைப் பார்த்துப் பார்த்துக் களிப்பதே மோக்ஷம். இது ஸாலோக்கியம், ஸாமீப்யம், ஸாரூபயம், ஸாயுஜ்யம் என நான்கு வகையாம். சிரவணம், மனனம், நிதித்யாஸனம் முதலியவைகளையும், ஹரிகுருபக்தியையும் செய்து சமதமாதி ஸம்பத்துக்களையும் அடைந்து ஞானம் பெறவேண்டும். இந்த ஞானத்தினால் பகவான் அநுக்ரஹம் புரிகிறார். அவருடைய அநுக்ரஹத்தால்தான் மோக்ஷத்தைப் பெறலாம். (3-2-23, 27; 3—3—48, 49, 54)

14 இது நிற்க, ஸ்வப்னபதார்த்தங்கள் உண்மையானவையா? அல்லது மாயாகல்பிதங்களா?

உண்மையானவையே. விஷ்ணுவால் சிருஷ்டிக்கப்பட்டு அவராலேயே நாசம் செய்யப்படுகின்றன. ஆனால் ஸ்வப்னத்தில் ஓர் அம்சம் மாத்திரம் **बाह्यवस्त्वभेदज्ञानम्** ("ஜாக்ரதவஸ்தையில் வெளியில் பார்த்த பதார்த்தமே இது" என்ற ஞானம்) மித்யை (3—2—1, 3, 5.)

15 வேதாதிகாரிகள் யாவர்?

முதல் மூன்று வருணத்தாருக்கிடையே விஷ்ணுபக்தர்களாயும் குருபக்தர்களாயும் உள்ளவர்களே வேதமோதலாம். (3-4-12)

त्रैवर्णिकानां वेदोक्ते सम्यग्भक्तिमतां हरौ ।

16 நான்காம் வருணத்தாராகிய சூத்திராதிகளுக்கு வேதாதிகாரமில்லையேல் எப்படி முக்தியைப் பெறுவது ?

புராண சிரவணாதிகளாலும் உயர்குலத்தோருக்குப்பரிசர்யை முதலியவைகளைச் செய்வதனாலும் முக்தி பெறலாம். (1—1—1.)

(தொடரும்)

M. ராம ராவ்.
ஸ்ரீ மாத்வஸபையின் காரியதரிசி,
கும்பகோணம்.

ஸ்ரீ விவேக ஸம்வர்த்தனீ ஸபா, திருநெல்வேலி.

இந்த ஸபையின் 28-வது வார்ஷிக மஹோத்ஸவம் நாளது 4—10—25 ஞாயிற்றுக்கிழமை ஸாயங்காலம் வெகு விமரிசையாக நடந்தேறியது. திருநெல்வேலி ஜில்லா ஜட்ஜ் பிரம்மஸ்ரீ A. S. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L., அக்கிராஸனம் வஹித்தார்கள். ஸப்ஜட்ஜ் பிர்மஸ்ரீ K. S. லக்ஷ்மீநரஸிம்மய்யர் அவர்கள் B.A., B.L., டிப்டிகலெக்டர் பிர்மஸ்ரீ T. கிருஷ்ணமூர்த்தி அய்யரவர்கள் B.A., திருநெல்வேலி, பாளையங்கோட்டை அம்பாஸமுத்திரம், தூத்துக்குடி டிஸ்டிரிக்ட் முனிசீப் அவர்கள், அநேக வக்கீல்கள், உத்யோகஸ்தர்கள், மிராசுதார்கள் முதலிய லௌகிகர்களும் மஹோபதேசகர் பிரும்மஸ்ரீ S. ராஜவல்லபசாஸ்திரிகள் அவர்கள், பிரும்மஸ்ரீ கோபாலசாஸ்திரிகள் அவர்கள் முதலிய வித்வான்களும் ஸபையை அலங்கரித்தார்கள். ஸபாத்யக்ஷரான ஹைகோர்ட்வக்கீல் பிரம்மஸ்ரீ A. K. ஸுந்தரமய்யர் அவர்கள், B.A., B.L., அன்று அக்ராஸனம்வஹிக்கும் பிரும்மஸ்ரீ A. S. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களுடைய குணாதிசயங்களை எடுத்துச் சொல்லி ஷெயார்களை அக்கிராஸனம் வஹிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். பிரும்மஸ்ரீ ராஜவல்லபசாஸ்திரிகள் அவர்கள் நான்கு ச்லோகரூபமாக ஸ்வாகதபத்திரிகை வாசித்தார். பிற்பாடு அக்ராஸனாதிபதியவர்கள் அங்கீகரித்து அன்று நடக்கவேண்டிய காரியங்களை நடத்தத்தொடங்கினார்கள். முதலில் ஸபாகார்யதரிசி பிரும்மஸ்ரீ R. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள் ரக்தாக்ஷி வருஷத்திய ரிபோர்ட்டு ஸம்ஸ்கிருதத்தில் எழுதியிருந்ததை வாசி

த்துத் தமிழில் அர்த்தம் சொன்னார்கள். பிறகு பிரும்மஸ்ரீ P. S. சுப்பிரமண்ய அய்யரவர்கள் M.A., B.L., காளிதாஸருடைய கிருதிகளிலிருந்து அநேக உதாரணங்கள் எடுத்துச்சொல்லி அக் கவிசிகாமணியின் கவிதாவைபவத்தை எடுத்துக்காட்டினார்கள். பிறகு பிரும்மஸ்ரீ V.V. ஸ்ரீனிவாஸாசாரியார் அவர்கள் B.A.,B.L., கம்பராமாயணத்திலிருந்து அநேகம் பாசுரங்களை உதாஹரித்துக் கம்பருடைய ராமபக்தியையும் வால்மீகியிடம் அவருக்குள்ள மதிப்பையும் அவருடைய சொற்சாமர்த்தியத்தையும் வெகுவிமர் சையாய் எடுத்துக்காட்டினார்கள். அப்புரம் பிரும்மஸ்ரீ ராஜவல் லபசாஸ்திரிகளவர்கள் காளிதாஸருடைய வைபவத்தைச் சொல் லுங்கால் அவருடைய ஸர்வசாஸ்திரபாண்டியத்தைத் தெளிவாய் காட்டிக் கம்பருடைய பாசுரங்களிலுள்ள அநேக பாகங்கள் ரகு வம்சம் முதலிய கிரந்தங்களில் ஏற்கனவே காளிதாஸரால் சொல் லப்பட்டிருக்கிறதென்றும் நிர்வசனம் செய்தார்கள். அக்ராஸனாதி பதியவர்கள் தன் முடிவுரையில் ஸபையை இன்னும் மேலான ஸ்திதிக்குக்கொண்டுவர எல்லாரும் சிரத்தையெடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அவர்களுக்கும் மற்றும் ஸதஸ்யர்களுக்கும் ஸபையோர்களின் கிருதக்ஞதையை ஸபாத் யக்ஷர் பிரும்மஸ்ரீ A. K. ஸுந்தரமய்யர் அவர்கள் வெளியிட் டார்கள். ஸபை வார்ஷிகோத்ஸவம் நடைபெறுவதில் நிர்விக்ன மாய் நடக்குமென்று தஞ்சாவூர் ஸப்ஜட்ஜ் பிரும்மஸ்ரீ K. S. ராம ஸ்வாமி சாஸ்திரிகளவர்களும், திருவனந்தபுரம் ரிடைர்டு திவான் பேஷ்கார் பிரும்மஸ்ரீ N. சுப்பிரமணிய அய்யரவர்களும், கும்ப கோணம் மடம் ஆஸ்தானவித்வான் பிரும்மஸ்ரீ ப. பஞ்சாபகேச சாஸ்திரிகளவர்களும் ஆசீர்வதித்து கடிதங்கள் அனுப்பியிருந் தார்கள். சிலவுக்காக ஷை பிரும்மஸ்ரீ சுப்பிரமணியஅய்யரவர்கள் ரூபாய் ஐந்து மணியார்டர் செய்திருந்தார்கள். திருநெல்வேலி அம்மன்ஸன்னிதித்தெரு பிரும்மஸ்ரீ ராமநாதபாண்டியாஜியாரவர் கள் ரூபாய் ஐம்பத்தொன்று கொடுத்தநுக்ரஹித்தார்கள். ஹை கோர்ட் வக்கீல் பிரும்மஸ்ரீ S. நாராயணஸ்வாமி அய்யரவர்கள் “சாகுந்தலம்,” ராமாயணம் இங்கிலீஷ் தர்ஜமா இப்புஸ்தகங்களை அனுப்பி ஸபையை அநுக்ரஹித்தார்கள். ஸதஸ் முடிந்தவுடன்

தீபாராதனையாகி எல்லோருக்கும் புஷ்பம், சந்தனம், தாம்பூலம் முதலியது கொடுக்கப்பட்டது. தன்னால் இயன்றமட்டும் சென்ற 28-வருஷங்களாக வைதிகதர்ம விசாரத்தில் முயன்றுவருவதும் ச்ருங்கேரி, கும்பகோணம், அஹோபிலம், நாங்குனேரி, திருக்குருங்குடி முதலிய மடாதிபதிகளுடைய விசேஷ அநுக்கிரஹத்திற்குப் பாத்திரமாயிருந்துவருவதுமான இந்த ஸபை மேன்மேலும் விருத்தியடையவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண பரதசத்ருக்ந
ஹநுமத்ஸமேத ஸ்ரீ ராமச்சந்திர பரப்ருஹ்மணே நம:.

ஸ்ரீராமசந்திர பட்டாபிஷேக

மஹோத்ஸவப் பத்திரிகை.

ஸாகேதே ரவிகோடி ஸந்நிப மஹாஹர்ம்யே ஸுவிம்மாஸநே
நாநாரத்ந விநிர்மிதே முநிஜநா கீர்ணே ஸதாநந்தநே
தேவாதீஸ்வர பங்கஜே நிவஸிதம் வாமாங்க ஸீதோஜ்வலம்
தேவேந்த்ரோபல நீல கோமல நிபம் ராமம் பஜே தாரகம்.

நாகப்பட்டணம் ஸௌந்தர்யராஜப் பெருமாள்கோவில் கீழ மடவிளாகம் மகா-ா-ஸ்ரீ பொ. மு. நா. முத்துராமசாமிசெட்டியாரவர்கள் சத்திரத்தில் தேவங்குடி வித்வான் பிரும்மஸ்ரீ கோவிந்த சாஸ்திரிகள் சிஷ்யாளாகிற பிரும்மஸ்ரீ ஸேதுராமசாஸ்திரிகளால் உபந்யஸிக்கப்பட்டுவரும் ஸ்ரீமத்வால்மீகி ராமாயணத்தில் நாளது குரோதன-ஷு அற்பசி-மீ 21உ (6–11–25) வெள்ளிக்கிழமை தினம் இரவு 8-மணிக்குமேல் $10\frac{1}{2}$-மணிக்குள் "ஸ்ரீ ராமச்சந்திர பட்டாபிஷேகம்" என்னும் கட்டம் உபந்யஸிக்கப்படுமாதலால் பக்தகோடிகள் யாவரும் இராத்திரி நடத்தும் பட்டாபிஷேக கதைக்கும், அன்று பகலில் 9-மணிக்குமேல் $10\frac{1}{2}$-மணிக்குள் தனுர்லக்னத்தில் நடக்கும் ஸ்ரீராமச்சந்திர பட்டாபிஷேக மகோத்ஸவத்திற்கும் வந்து நேத்திரானந்தம், சுரோத்திரானந்தமடைந்து ஸ்ரீ ராமபிரஸாதத்தை அடையும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ராமபக்தர்கள்.